**ட்றிங்கோ பெற்றோலியம் ரேர்மினல் (பிறைவேட்) லிமிட்டட் - 2023**

-------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ட்றிங்கோ பெற்றோலியம் ரேர்மினல் (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்குஎசாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கம்பனியின் செயற்பாட்டு விளைவு ரூபா. 47 மில்லியன் தொகையான நட்டமொன்றாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா. 38 மில்லியன் தொகையாகும். ஆகையினால், நிதி விளைவில் ரூபா 9 மில்லியன் பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. TPTL ஐ பதிவு செய்யும் போது ஏற்பட்ட சட்டவிரோத சூழ்நிலைகள் மற்றும் அதன் ஸ்தாபனத்தில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நிறுவனத்திற்கு எதிராக மூன்றாம் தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட சட்ட வழக்கு காரணமாக இரண்டு வழக்குகளுக்காக (SCFRA 09/2022 and SCFRA 14/2022) சட்டக் கட்டணமாக ரூபா. 8 மில்லியன் செலவு செய்ய வேண்டியிருந்தமை ,e;j பின்னடைவுக்கான பிரதான காரணங்களாகவிருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின வகைகளின் போக்கு பகுப்பாய்வு

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டின் பிரதான வருமானம், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் உரிமை அதிகரிப்பு அல்லது குறைவின் சதவீதத்துடனான பகுப்பாய்வு பின்வருமாறு.

| வரிசை உருப்படிகள் | 2023<br>ரூபா. மில்லியன் | 2022<br>ரூபா. மில்லியன | முரண்<br>ரூபா. மில்லியன | அதிகரிப்பு/ (குறைவு) % | கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|
| நிர்வாக செலவுகள் | 19.45 | 6.47 | 12.98 | 201 | கருத்திட்டமுகாமையாளர் நியமனம் மற்றும் கம்பனிக்கு எதிராக மூன்றாம் தரப்பினர் தாக்கல் செய்த வழக்குக்காக ஏற்பட்ட சட்ட கட்டணம் ரூபா. 8 மில்லியன் செலவுகள காரணமாக நிர்வாகச் செலவுகள் 201 சதவீதம் அதிகரித்திருந்தன |
| நிதி வருமானம் | 3.21 | Nil | 3.21 | - | நிதி வருமானம் முக்கியமாக அழைப்பு வைப்புக்களால் பெறப்பட்ட வட்டியுடன் அடங்கியுள்ளது. |
| மொத்த சொத்துக்கள் | 351.19 | 317.82 | 33.37 | 10 | காணி துப்பரவு மற்றும் தளத்தில் செய்யப்பட்ட பூர்வாங்க பணிகள் தொடர்பான குறைவேலை பணிகள் பணிகள் ரூபா.45.84 மில்லியனால் அதிகரித்ததன் காரணமாக மொத்த சொத்துக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. |
| மொத்த உரிமை | 115.28 | 62.03 | 53.25 | 86 | CPC மற்றும் LIOC இடையே 51:49 விகிதத்தின் அடிப்படையில் ரூபா.100 மில்லியன் பங்குகள் வெளியிடப்பட்டதன் காரணமாக மொத்த உரிமையானது அதிகரித்துள்ளது. |
| மொத்த பொறுப்புக்கள் | 1.96 | 21.79 | (19.83) | 91 | கம்பனியினால் உடமையாக்கப்பட்ட 61 கொள்கலன்களுக்கான குத்தகை வாடகைக்காக ரூபா. 20.2 மில்லியன் LIOC நிறுவனத்திற்கு செலுத்தியதன் காரணமாக தற்போதைய நடைமுறை பொறுப்புகள் 91 சதவீதத்தினால் குறைந்துள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| BOI சட்டத்தின் 17வது பிரிவின் கீழ் செயல்படும் புதிய கம்பனியினை அமைப்பதற்காக கம்பனியானது 2022 டிசம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட முதலீட்டு விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தது. இந்த விண்ணப்பம் 2022 டிசம்பர் 20 அன்று முதலீட்டு சபையினால் (BOI) ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு BOI க்கு செலுத்தப்பட்ட மொத்த பதிவுக் கட்டணம் ரூபா. 1.2 மில்லியன் ஆகும்.இருப்பினும், BOI உடனான ஒப்பந்தம் 2024 யூன் மாத இறுதி வரையிலும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, கம்பனியினால் இதுவரை BOI கம்பனியாக அமைக்க முடியவில்லை மற்றும் BOI சட்டத்தின் பிரிவு 17 இன் கீழான பலன்களையும் பெற முடியவில்லை. மேலும், இது செயல்பாட்டு நடவடிக்கைகளை தொடங்குவதிலும் வணிக நோக்கங்களை சரியான நேரத்தில் அடைவதிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. | BOI இன் சட்ட தொழிற்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் போது, ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முனனர், திருத்தப்பட்ட அமைப்பு அக விதி, CEA இன் அனுமதி அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு திட்டம், வரைவு ஒப்பந்தம் மற்றும் கணக்காய்வாளர்களின் உறுதிப்படுத்தல் போன்ற பல ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அவர்கள் எங்களைக் கேட்டுக்கொண்டனர். அந்த ஆவணங்களைத் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது, மேலும் மூன்று மாதங்களுக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது TPTL இன் கருத்திட்டத்தினை BOI இல் பதிவு செய்ய உதவுகிறது. | BOI பதிவினை பெற்றுக்கொள்வதற்கும் வணிக நோக்கங்களை சரியான நேரத்தில் அடைவதற்கான செயல்பாட்டு நடவடிக்கைகளை தொடங்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 தந்திரோபாய செயற்பாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் குறுங்கால தந்திரோபாய திட்டத்தின் பிரகாரம், திட்டத்தின் முதல் கட்டம் அல்லது முதல் மூன்று வருட காலப்பகுதியில் 09 கொள்கலன்கள் புதுப்பிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், கம்பனி ஏற்கனவே முதல் இரண்டு வருடங்கள் கடந்துவிட்டாலும் சரியான நேரத்தில் இலக்கை அடைந்ததையோ அல்லது இலக்கை அடைந்ததையோ அவதானிக்க முடியவில்லை. எனவே, கருத்திட்டத்தை நிறைவு செய்வது மற்றும் தந்திரோபாய திட்டத்தின் பிரகாரம் சரியான நேரத்தில் வணிக | இதற்கான மூலதன செலவுத் தேவைப்பாடு ரூபா. 11.9 மில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும். இந்த முதலீட்டிற்கு TPTL இடம் நிதி இல்லை என்பதன் காரணமாக, 20/05/2024 அன்று செய்தித்தாள்களிலும் மற்றும் TPTL, CPC மற்றும் LIOC இன் இணையதளங்களில் 21/05/2024 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (EOI) | கருதிட்டத்திற்கு தேவையான நிதியினை பிரித்தெடுக்கும் செயற்பாடுகள் விரைவுபடுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளைத் தொடங்குவது என்பன சந்தேகத்திற் குரியதாகவுள்ளன. | கோரப்பட்டது. EOI இன் முடிவடையும் திகதி 05/07/2024 ஆகும்.<br>EOI இன் முடிவுகளின் அடிப்படையில் கருத்திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் திட்டமிடப்படும். | |
| (ஆ) | கம்பனி பொதுவான பயனர் வசதி ஒப்பந்தமெபன்றினுள் உள் நுழைந்திருக்கவில்லை அல்லது கம்பனியானது ஜெட்டிகள், பைப்லைன்கள் மற்றும் பிற துணை சேவைகளின் பயன்பாடு உட்பட பொதுவான பயனர் வசதிகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஒரு திட்டத்தினை கொண்டிருக்கவில்லை. எனவே, திருகோணமலையில் உள்ள கொள்கலன் பண்ணை திட்டத்தின் வணிக நடவடிக்கையை வெற்றியடையச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பொதுவான உடன்பாடு எதுவும் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கருத்திட்டத்தின் கட்டம் 1 இன் அபிவிருத்தி நடவடிக்கைகளை வடிவமைக்க நியமிக்கப்பட்ட ஆலோசகர், 2024 ஜுன் மாதத்திற்குள் விரிவான வடிவமைப்பை வழங்க உடன்பட்டுக் கொண்டார்.<br>CPC மற்றும் CPSTL ஆகிய இரண்டினாலும் கருத்திட்டத்தின் முதல் கட்டத்தின் விரிவான வடிவமைப்பைப் படித்த பிறகு பொதுவான பயனர் வசதிகளுக்கான ஒப்பந்தம் இறுதியாக தீர்மாணம் செய்யப்படும். | திருகோணமலையில் உள்ள கொள்கலன் பண்ணை கருத்திட்டத்தின் வணிக நடவடிக்கைகளை வெற்றியடையச் செய்வதற்கு, நிறுவனத்தின் அக்கறையுடைய தரப்பினர்களுடன் பொதுவான பயனர் வசதி ஒப்பந்தங்களை மேற்கொள்ள விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 கருத்திட்டங்களின் காலதாமதம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திருகோணமலையில் உள்ள கொள்கலன் பண்ணை அபிவிருத்தி திட்டத்திற்கான மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் (CEA) அனுமதியைப் பெறுவதற்கு தேவையான ஆரம்பநிலை சூழல் பரீட்சை (IEE) அறிக்கையை தயாரிப்பதற்கான ஆலோசனைத் திட்டம் 2023 செப்டம்பர் 13 அன்று ஒப்பந்த மதிப்பு ரூபா. 3.3 மில்லியன் தொகைக்கு உள்ளூர் ஆலோசகருக்கு வழங்கப்பட்டது. ஒப்பந்த காலம் 2.5 மாதங்கள் ஆகியிருந்த போதிலும், IEE அறிக்கையானது இன்னும் பெற்றுக்கொள்ளப் | பின்வரும் காரணங்களால் ஆலோசகரின் பணியின் செயல் முன்னேற்றம் தாமதமாகியுள்ளது.<br>• அறிக்கையை நிறைவு செய்வதற்குத் தேவையான தரவுகளைச் சேகரிப்பதற்கான அனுமதிகளை வழங்குவதில் கருத்திட்டத்தின் சில அக்கறையுடைய தரப்பினர்களிடமிருந்தான கால தாமதம்.<br>• நிலக்கீழ் நீர் மதிப்பாய்வு | கம்பனியானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதியினை பெறுவதற்கு உதவும் வகையில் ஆரம்ப சுற்றுச்சூழல் பரிசோதனை (IEE) அறிக்கையைத் தயாரிப்பது ஆலோசகரிடம் இருந்து விரைவுபடுத்தப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| பட்டிருக்கவில்லை. கம்பனியின் பதிவுகளின் பிரகாரம், 2023 டிசம்பர் 31 இல் திட்டத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் 10 சதவீதம் மட்டுமே ஆகும். இதன் விளைவாக, திட்டத்திற்கான IEE அறிக்கையினை தயாரிப்பது 2024 ஜூலை வரையிலும் 07 மாதங்கள் தாமதமாகியிருந்தது. | China Bay lagoon பகுதியில் நிலவிய மோசமான வானிலை காரணமாக நீண்ட காலத்திற்கு ஆய்வினை நடத்த முடியவில்லை.<br><br>• கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள ஏனைய ஒப்பந்ததாரர்களிடமிருந்தான தரவுகளை வழங்குவதில் காலதாமதம். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட தகவல்களின் பழரகாரம், 2022 ஆம் ஆண்டிற்கான மூலதன வரவு செலவுத் திட்டத்தில் ரூபா. 139.81 மில்லியன் அல்லது 76 சதவீதம் பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா. 3,965 மில்லியன் அல்லது 100 சதவீதம் பயன்படுத்தப்படாமல் இருந்தது. கம்பனியின் மூலதன மேம்பாட்டிற்காக 2024 ஆம் ஆண்டுக்கான மூலதன வரவு செலவுத் திட்டத்தில 4,291.16 மில்லியன் தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் பாதீடு செய்யப்பட்ட மூலதன செலவுகளுக்கு நிதியளிக்க பாதுகாப்பான உளளக் அல்லது வெளிப்புற நிதி மூலங்கள் எதுவும் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் மூலதன பட்ஜெட் ஒதுக்கீட்டில் 50% ஆனவை 10 கொள்கலன்களுக்கான கொள்கலன் பழுதுபார்ப்பு மற்றும் மறுசீரமைப்புக்கான பாதீட்டினை கொண்டுள்ளது மற்றும் மீதியானது அதனுடன் தொடர்புடைய வசதிகளின் அபிவிருத்திக்காக பாதிடப்பட்டடிருந்தது. EOI இன் முடிவுகளின் அடிப்படையில் திட்டத்தின் வ அபிவிருத்தி நடவடிக்கைகள் திட்டமிடப்படல் வேண்டும் மற்றும் 2024 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் வெளியீட்டின் அடிப்படையில் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும். | திட்டத்திற்கு தேவையான நிதியினை பாதுகாக்கும் செயல்முறையானது விரைவுபடுத்தப்படல் வேண்டும். |